1987 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே போடப்பட்டிருக்கிற திட்டத்தில் இந்தப் பகுதிகள் இணைக்கப்படவில்லை. குழாய்கள் பதிப்பது பெரிய காரியம் அல்ல. தண்ணீர் அங்கே வரவேண்டும். அதற்காகத்தான் தேவையான இடங்களைப் பார்த்து, எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து, அதற்கான திட்டங்களைத் தீட்டி, அதன் பிறகுதான் அறிவிக்க முடியும். வெகுவிரைவில் அதற்கான திட்டத்தைத் தீட்ட நான் முயற்சி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடப்படும் நிலை.

திரு. எல். இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூரில் உள்ள கார், டீசல் வேன் தயாரிக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மைய அரசின் புதிய கொள்கையால் மூடப்படும் அபாய நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மை துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

எரிபொருள் குறைவாக செலவாகக்கூடிய 1000 சி.சி.க்கு மேல் உள்ள எஞ்சின் மோட்டார் கார்களுக்கு வழங்கப்பட்டு வந்த சுங்கவரி மற்றும் ஆயத்தீர்வை சலுகையை மைய அரசு 27—11—1986-லிருந்து விலக்கிக் கொண்டது. இதனால் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் தயாரிக்கும் "ஸ்டாண்டர்டு 2000" வண்டியின் விலை அதிகமாவதால் ஆர்டர்களை நீக்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மறுபரிசோதனையில் மோட்டார் கார்கள் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான நியதிகளுக்குப் பொருந்தியதாகவும் உள்நாட்டு செயல்முறை திட்டத்திற்கு உகந்ததாகவும் இருந்தால் சுங்க வரி மற்றும் ஆயத் தீர்வை சலுகைகள் மீண்டும் வழங்கப்படும் என்று மைய அரசு 24—12—1986-ல் உத்தரவிட்டுள்ளது.

மைய அரசு தனது புதிய கொள்கையை மாற்றம் செய்து கொண்டுள்ளதால் செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் உள்ள கார், டீசல் வேன் தயாரிக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடப்படும் அபாயத்தில் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் மத்திய அரசு தனது புதிய தொழில் கொள்கையில் மாற்றம் செய்துள்ளது என்ற வார்த்தை குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என் னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத்தொழிற் சாலையில் 3,500 தொழிலாளர்கள் 20 ஆண்டுக் காலமாக நல்ல முறையில் பணியாற்றி, சிறப்பாக இந்தத் தொழிற்சாலை நடை பெற்று வருவதை நாம் அறிவோம். விந்தியத்திற்குத் தெற்கே உள்ள ஒரே ஒரு கார் தொழிற்சாலை இந்த ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலைதான். இப்போது இங்கே தயாரிக்கப் படும் கார்களுக்கும் வேன்களுக்கும் இந்தியா எங்கும் சிறப்பான வரவேற்பு இருப்பதை அறிந்து, வடபுலத்தில் உள்ள இதற்கு போட்டியான நிறுவனம் தேவையில்லாமல் சில அதிகாரிகளின் துணையோடு இப்படிப்பட்ட ஒரு கம்பெனியை மூடுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். சுங்கத் தீர்வை இந்த நிறுவனத்திடம் வசூலிக்க வேண்டும் என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. அதே நேரத்தில் இந்த நிறுவனத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை கூட முடக்கி வைக்க மத்திய அரசின் சுங்க இலாகா உத்தரவு போட் டிருக்கிற காரணத்தால் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள குறைகளை இனியாவது நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது அத்தனையும் உண்மை. தென்னகத்தில் இருக்கின்ற ஒரே ஒரு மோட்டார் கார் தொழிற்சாலை அந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை தான். அதனை எப்படியாவது மூடிவிட வேண்டும் என்பதற் கான ஒரு பெரிய முயற்சியை மற்றவர்கள் எல்லாம் எடுத்ததாக நான் அறிகிறேன். அந்தக் கார் எந்த அளவுக்குப் பெட்ரோலைப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தவரையில் அது பற்றி ஆராய்வதற்காக மெக்கானிக்கல் இன்ஜினியர்களை அனுப்பு வதற்குப் பதிலாக சி.பி.ஐ. ஆட்களை அனுப்பி இருக்கிறார்கள்.

1987 ஏப்ரல் 29] [திரு. க. இராசாராம்]

அவர்களைப் பொறுத்தவரையில் ஏதாவது ஆதாரம் கிடைக்கிறதா என்பதைத்தான் பார்ப்பார்களே தவிர, இன்ஜின்களைப் பார்ப்பதில்லை. அங்கே இன்ஜினியர்கள் வரவில்லை. ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதினார்கள். இங்கே இருக்கின்ற நிறுவனம் இங்கிலாந்து நாட்டினுடைய கூட்டுறவோடு நடக்கக்கூடிய நிறுவனமாக அது இருக்கிறது. ஆகவே, இங்கிலாந்து நாட்டுத் தூதரும் கடிதம் எழுதினார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு கொஞ்சம் கீழே இறங்கி வந்து, அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மாற்றிக் கொண்டு மெக்கானிக்கல் இன்ஜினியர்களை அனுப்பி பரிசோதிக்க ஏற்பாடு செய்தது; பரிசோதித்தும் ஆகிவிட்டது. அதற்குள்ளாக அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு அங்கே இருக்கின்ற எல்லா தொழிலாளர்களும் தங்களுடைய சம்பளத்தைக் கொடுத்து, நிறுவனத்தைக் காப்பாற்ற முன்வந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக இது நடந்திருக்கிறது. இதைப் பார்த்தவுடன் மைய அரசும் இதற்கான சலுகைகளை அளிக்க ஆரம்பித்து இருக்கிறது. எனவே மீண்டும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது.

(உ) கன்னியாகுமரி மாவட்ட சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள் அதனை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வை. பாலச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது சம்பந்தமாக அவர்கள் மனு செய்தும் உதவித் தொகை கிடைக்காமல் ஆயிரத்துக்கும் அதிகமானோர் குமரி மாவட்டத்தில் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.